

கள்ளக்குறிச்சி மாவட்டம், சங்கராபுரம் ஊராட்சி ஒன்றியம், கொசப்பாடி ஊராட்சியில் மந்தவெளி வளாகத்தில் 'உங்களுடன் ஸ்டாலின்' சிறப்பு திட்ட முகாமில் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், சங்கராபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான தா.உதயசூரியன் கலந்து கொண்டு தலைமை தாங்கி முகாமை தொடங்கி வைத்தார். இம்முகாமில் ஒன்றியக் கழகச் செயலாளர்கள் ஆறு.கதிரவன், இரா.செல்வம். பன்னீர்செல்வம், ஒன்றியக் குழுப் பெருந்தலைவர் திலகவதி நாகராஜன், பல்வேறு துறை சார்ந்த அரசு உயர் அதிகாரிகள், அலுவலர்கள், கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள், மனுதாரர்கள், பயனாளிகள் என ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

### ஆவணி மாதத்தில் சுபமுகூர்த்த தினத்தன்று

# அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களிலும் - கூடுதல் முன்பதிவு வில்லைகள்!

## பதிவுத் துறைத் தலைவர் அறிவிப்பு!

சென்னை, செப்.3-

பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று ஆவணி மாதத்தில் வரும் சுபமுகூர்த்த தினத்தன்று பொதுமக்கள் பயன்பெறும் வகையில் அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களிலும் கூடுதல் முன்பதிவு வில்லைகள் ஒதுக்கீடு செய்து பதிவுத் துறைத் தலைவர் அறிவித்துள்ளார்.

அவரது அறிவிப்பு வருமாறு:-

சுபமுகூர்த்த தினங்கள் என கருதப்படும் நாட்களில் அதிகளவில் ஆவணப் பதிவுகள் நடைபெறும் என்பதால் அன்றைய தினங்களில் பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று ஆவணப்பதிவுக்காக கூடுதல் முன்பதிவு வில்லைகள் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

தற்போது ஆவணி மாதத்தில் வரும் சுபமுகூர்த்த தினங்களான 04.09.2025 அன்று அதிகளவில் பத்திரப் பதிவுகள் நிகழும் என்பதால் கூடுதலாக முன்பதிவு வில்லைகள் ஒதுக்கீடு செய்யுமாறு பல்வேறு தரப்பு பொதுமக்களிடமிருந்து கோரிக்கைகள் பெறப்பட்டுள்ளன.

எனவே, ஆவணி மாதத்தில் வரும் சுபமுகூர்த்த தினங்களான 04.09.2025 அன்று ஒரு சார்பதிவாளர் உள்ள அலுவலகங்களுக்கு 100க்கு பதிலாக 150 முன்பதிவு வில்லைகளும் இரண்டு சார்பதிவாளர்கள் உள்ள அலுவலகங்களுக்கு 200க்கு பதிலாக 300 முன்பதிவு வில்லைகளும் அதிகளவில் ஆவணப் பதிவுகள் நடைபெறும் 100 அலுவலகங்களுக்கு 100க்கு பதிலாக 150 சாதாரண முன்பதிவு வில்லைகளோடு ஏற்கெனவே வழங்கப்படும் 12 தட்கல் முன்பதிவு கூடுதலாக தட்கல் முன்பதிவு வில்லைகளும் வில்லைகளுடன் 4 பொதுமக்களின் பயன்பாட்டிற்காக வழங்கிட உத்தரவிடப்பட்டுள்ளது.

இவ்வாறு அவ்வறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### கழக முப்பெரும் விழாவையொட்டி

# நீலகிரி மாவட்டம் முழுவதும் கழகக் கொடியேற்றல் - பொதுக்கூட்டங்கள்!

## மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம்!

நீலகிரி, செப்.3-

நீலகிரி மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் மாவட்ட கழக அலுவலகமான உதகை கலைஞர் அறிவாலயத்தில் மாவட்ட அவைத் தலைவர் போஜன் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட கழக பொறுப்பாளர் கே.எம்.ராஜு அனைவரையும் வரவேற்றார். கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் பா.மு.முபாரக், தேர்தல் பணி செயலாளர், அரசு கொறடா கா.ராமச்சந்திரன், கூடலூர் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் பரமேஸ்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்ட துணைச் செயலாளர்கள் ரவிகுமார், லட்சுமி, மாவட்ட பொருளாளர் நாசர் அலி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் இளங்கோவன், திராவிடமணி, செந்தில் ரங்கராஜ், தம்பி இஸ்மாயில், சுனிதா நேரு, மாநில சிறுபான்மை பிரிவு துணை செயலாளர் அன்வர்கான், நகர செயலாளர்கள் ஜார்ஜ், ராமசாமி, இளஞ்செழியன், ரமேஷ், ஒன்றிய கழக செயலாளர்கள் காமராஜ், நெல்லை கண்ணன், தொரை, பிரேம்குமார், பீமன், சிவானந்தராஜா, சுஜேஷ், ராஜ்குமார், ஜெகதீசன், உத்தமன், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் கருப்பையா, சதக்கத்துல்லா, லியாகத் அலி, செல்வம், உதயதேவன், ராஜேந்திரன், அமிர்தலிங்கம், மகேஷ், காளிதாசன், வாணீஸ்வரி, பேரூர் கழக செயலாளர்கள் உதயகுமார், நடராஜன், சதீஸ்குமார், சுந்தர்ராஜ், காளிதாஸ், சஞ்சீவ்குமார், முத்து, ரமேஷ்குமார், சின்னவர், சுப்ரமணி, மார்டின், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் சசிகுமார், கோமதி, ராஜா, எல்கில் ரவி, காந்தல் ரவி, ராம்குமார், ரஹமத்துல்லா, ஜெயந்தி, வெங்கடேஷ், பவீஷ், செந்தில்நாதன், ஜெயகுமார், சுரேஷ், பவீஷ், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் நௌபுல், பாபு, நாகராஜ், பத்மநாபன், வினோத்குமார், நகராட்சி தலைவர்கள் பரிமளா, சிவகாமி, ஜெயகுமாரி, பேரூராட்சி தலைவர்கள் கலியமூர்த்தி, கௌரி, சித்ரா தேவி, வள்ளி, ஹேமமாலினி, ராதா, தொ.மு.ச. மாவட்ட கவுன்சில் செயலாளர் ஜெயராமன், உட்பட கழக நிர்வாகிகள் கலந்துக்கொண்டனர். கூட்ட முடிவில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் திராவிட மணி நன்றி கூறினார்.

### நீலகிரி மாவட்டத்தில் கழக முப்பெரும் விழா நிகழ்ச்சிகள்!

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாள் மற்றும் கழகம் தோன்றிய தினம் ஆகியவை உள்ளடக்கிய கழக முப்பெரும் விழாவாக ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடப்பட்டு வருகிறது.

அதேபோல், இவ்வாண்டு செப்டம்பர் 17 அன்று தலைமைக் கழகத்தின் சார்பில் கரூர் மாவட்டத்தில் விருதுகள் வழங்கும் நிகழ்வோடு சிறப்போடு நடைபெறவுள்ளது. இதில் கழக நிர்வாகிகள் அனைவரும் திரளாக கலந்து கொள்வது எனவும்,

நீலகிரி மாவட்டத்தில் செப்டம்பர் 15ம் தேதி முப்பெரும் விழா நிகழ்ச்சிகளாக கழக கொடியேற்று விழா நிகழ்ச்சிகள், முதியோர் இல்லங்களில் உணவுகள் வழங்குதல், பொதுக்கூட்டங்கள், தெருமுனை கூட்டங்கள் போன்ற நிகழ்ச்சிகளை மாவட்டத்திலுள்ள அனைத்து நகர ஒன்றிய - பேரூர் - கிளை கழக பகுதிகளிலும் நடத்துவது என தீர்மானிக்கப்பட்டது.

### விருது பெறுபவர்களுக்கு வாழ்த்து!

ஒவ்வொரு ஆண்டும் தலைமைக் கழகத்தின் சார்பில் நடைபெறும் கழக முப்பெரும் விழா நிகழ்ச்சிகளில் கழகத்தில் சிறந்து விளங்கியவர்களுக்கு தந்தை பெரியார் - பேரறிஞர் அண்ணா - தலைவர் கலைஞர் - பாவேந்தர் - இனமான பேராசிரியர் மற்றும் கழக தலைவர் ஆகியோரது பெயர்களில் விருதுகள் வழங்கி சிறப்பிக்கப்படுவார்கள்.

அதேபோல், இவ்வாண்டு கரூரில் நடைபெறும் கழக முப்பெரும் விழா நிகழ்ச்சியில்

பெரியார் விருது - கழக துணை பொதுச்செயலாளர்

கனிமொழி கருணாநிதி எம்.பி., அவர்களுக்கும்

அண்ணா விருது - முன்னாள் தணிக்கைக்குழு உறுப்பினர் சுப.சீத்தாராமன் அவர்களுக்கும்

கலைஞர் விருது - முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் சோ.மா.இராமச்சந்திரன் அவர்களுக்கும்

பாவேந்தர் விருது - கழக மூத்த முன்னோடி

குளித்தலை சிவராமன் அவர்களுக்கும்

பேராசிரியர் விருது - முன்னாள் சட்டமன்ற கொறடா

மருதூர் ராமலிங்கம் அவர்களுக்கும்

மு.க.ஸ்டாலின் விருது - முன்னாள் அமைச்சர்

பொங்கலூர் நா.பழனிச்சாமி அவர்களுக்கும்

வழங்கப்பட உள்ளது. விருதுகள் பெறும் அனைவருக்கும் நீலகிரி மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறது.

### கழக உறுப்பினர் சேர்க்கை ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் நன்றி!

கழக தலைவர் - தமிழக முதல்வர் அவர்கள் மதுரையில் நடந்த கழக பொதுக்குழு கூட்டத்தில் அறிவித்தப்படி, "ஓரணியில் தமிழ்நாடு" எனும் கழக உறுப்பினர் சேர்க்கை பணி நீலகிரி மாவட்டத்தில் துவங்கப்பட்டது.

தலைமைக் கழகம் சார்பில் மக்களுடன் ஸ்டாலின் எனும் செயலி மூலம் ஒவ்வொரு வாக்குச்சாடியிலும் 40 சதவீத வாக்காளர்களை உறுப்பினர்களாக சேர்க்கப்பட வேண்டும் என உதகை - கூடலூர் - குன்னூர் ஆகிய 3 சட்டமன்ற தொகுதிகளுக்கும் இலக்கு நிர்ணயித்திருந்த நிலையில், நீலகிரி மாவட்டத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட 40 சதவீத இலக்கிற்கும் மேலாக உறுப்பினர்கள் சேர்க்கபட்டுள்ளனர் என்பது மகிழ்ச்சிக்குரியதாகும்.

இப்பணியில் ஈடுபட்ட மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைக் கழக நிர்வாகிகள், செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், நகர - ஒன்றிய - பேரூர் கழக செயலாளர்கள், BLA - 2, BDA உட்பட ஒவ்வொரு கழக தொண்டர்களுக்கும் இக்கூட்டம் வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



விளாத்திகுளம் பேரூராட்சிக்குட்பட்ட, 5வது வார்டு, துலுக்கன்குளம் விளக்கில் சட்டமன்ற உறுப்பினரின் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.7லட்சம் மதிப்பீட்டில் பயணியர் நிழற்குடை கட்டுவதற்கான பணியை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர், சட்டமன்ற சட்ட விதிகள் ஆய்வுக் குழு தலைவர்,தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஜீ.வி. மார்க்கண்டேயன் அடிக்கல் நாட்டி துவக்கி வைத்து இனிப்பு வழங்கினார். நிகழ்வில் விளாத்திகுளம் பேரூராட்சி மன்றத் தலைவர் சூர்யா அய்யன்ராஜ், வேலுச்சாமி ஒன்றியச் செயலாளர்கள் ராமசுப்பு, அன்புராஜன், இம்மானுவேல், ராமலிங்கம் உட்பட கழக நிர்வாகிகள். பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



வேலூர் மாநகராட்சியின் குப்பைக் கிடங்கில் கிடைத்த தங்க மோதிரத்தை ஒப்படைத்த தூய்மை பணியாளருக்கு நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். கதிர்ஆனந்த் பரிசு வழங்கி பாராட்டினார். உடன் மாநகரச் செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், துணை மேயர் எம்.சுனில்குமார், ஆணையர் லட்சுமணன், மண்டலக் குழுத் தலைவர் யூசுப் கான் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும்

# திட்டங்களின் செயல்பாடுகள் தொடர்பான ஆய்வுக் கூட்டம்!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் நடைபெற்றது!

சென்னை, செப். 3 –

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (1.9.2025) சென்னை நந்தனத்தில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் அலுவலக கூட்டரங்கில், நான் முதல்வன் திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்படும் முன்னெடுப்புகளான கல்லூரிக் கனவு திட்டம், பொறியியல், கலை மற்றும் அறிவியல், பாலிடெக்னிக், தொழிற்பயிற்சி நிலையங்களில் திறன் பயிற்சி வழங்குதல், SCOUT திட்டம், தமிழ்நாடு திறன் போட்டிகள், நிரல் திருவிழா (Hackathon), தமிழ்நாடு மாநில அளவிலான வேலைவாய்ப்பு திட்டம் (TNSLPP), உயர்வுக்குப்படி திட்டம், நான் முதல்வன் போட்டித் தேர்வுகள் (குடிமைப்பணித் தேர்வு, ஊக்கத்தொகை திட்டம் மற்றும் SSC/RRB & Banking போட்டித் தேர்வுகளுக்கான உறைவிடப் பயிற்சி) ஆகியவற்றின் தற்போதைய முன்னேற்றம் குறித்து விரிவாக ஆய்வு மேற்கொண்டார்.

முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டின் கடைக்கோடியில் உள்ள பள்ளி மாணவ, மாணவிகளும் தலைசிறந்த கல்லூரிகளில் பயிலும் வாய்ப்பினை பெறவும், கல்லூரி படிப்பினை முடித்தவுடனே தொழில் நிறுவனங்களில் வேலைவாய்ப்பினை பெறுவதற்கு, தேவையான திறன்களை வளர்த்துக் கொள்ளவதற்காகவும் நான் முதல்வன் மற்றும் "வெற்றி நிச்சயம் திட்டங்களை தொடங்கி வைத்து, செயல்படுத்தி வருகின்றார்.

### திறன் வளம்மிக்க இளைய சமுதாயம்!

இத்திட்டங்களின் காரணமாக திறன் வளம் மிக்க இளைய சமுதாயத்தை கொண்டதாக தமிழ்நாடு உருவெடுத்துள்ளதால், உலக அளவிலான முன்னணி நிறுவனங்கள் தங்கள் தொழிற்சாலைகளை தமிழ்நாட்டில் நிறுவி வருகின்றனர். இந்த தொழிற்சாலைகளின் மூலமாக தமிழ்நாட்டைச் சேர்ந்த லட்சக்கணக்கான இளைஞர்கள் வேலைவாய்ப்புகளை பெற்று வருகின்றனர். மேலும் தமிழ்நாடு 11.19 சதவீதம் என்ற இரட்டை இலக்க பொருளாதார வளர்ச்சியுடன் இந்தியாவிலேயே முதல் மாநிலமாக விளங்குகின்றது.

நான் முதல்வன் திட்டம் தொடங்கப்பட்ட முதலாம் ஆண்டிலேயே 13 லட்சம் மாணவர்களுக்கு திறன் பயிற்சி அளித்து, தற்போது வரை சுமார் 41 லட்சம் திறன் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

நான் முதல்வன் SCOUT திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்ட மாணவ, மாணவிகளுக்கு ஜப்பானில் உள்ள கியோட்டோ பல்கலைக்கழகம், தென்கொரியா நாட்டின் பூசன், கோச்சான் பல்கலைக் கழகங்கள், தர்ஹம் பல்கலைக்கழகம் உள்ளிட்ட உலகின் முக்கியமான பல்கலைக் கழகங்களிலும், பல்வேறு நாடுகளைச் சேர்ந்த முன்னணி நிறுவனங்களில் இணைய தளம் மூலமாகவும், நேரடியாகவும் Data Science, AI, Bio Technology போன்ற துறைகளில் உலகளாவிய தொழில்முறை பயிற்சி அளிக்கப்பட்டு பேங்க் ஆப் நியூயார்க், சிட்டிகார்ப், Zoho, HCL டெக் போன்ற பெருநிறுவனங்களில் பணிபுரிய வேலைவாய்ப்பையும் பெற்றுள்ளனர்.

நான் முதல்வன் திட்டத்தின் ஒரு பகுதியாக, "Placement Readiness Training through Corporate Volunteering அறிமுகப்படுத்தப்பட்டு, தொழில் துறையின் நிபுணர்கள் நேரடியாக மாணவர்களுக்கு வழிகாட்டி, வேலைவாய்ப்பிற்கு தேவையான அத்தியாவசிய திறன்களைப் பகிர்ந்து பயிற்சி வழங்குகின்றனர். தற்போது Cognizant, Capgemini, Avantor, First Source, Kambaa, Milacron, HCLTech, Kotak Bank, HDFC Bank, Ford உள்ளிட்ட 28 முன்னணி நிறுவனங்களின் 131 நிபுணர்கள் 22 அரசு கல்லூரிகளைச் சேர்ந்த 3,899 இறுதியாண்டு மாணவர்களுக்கு பயிற்சி வழங்கியுள்ளனர்.

### திறன் மேம்பாட்டு பயிற்சி!

தமிழ்நாடு திறன் போட்டி (TNSkills Competition) பயிற்சி மூலம், இந்திய திறன் போட்டியில் தமிழ்நாடு, கடந்த ஆண்டில் 40 பதக்கங்களை வென்று 3 ஆம் இடத்தினை பிடித்தது.

இளைஞர்களின் படைப்பாற்றல் மற்றும் புதுமைத் திறனை வளர்க்கும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்ட நான் முதல்வன் நிரல் திருவிழா திட்டத்தின் மூலம் நுட்பவியல் சவால்கள் (problem statements) இறுதி ஆண்டுப் பொறியியல் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு, முதலாவது பதிப்பில் 8,486 குழுக்களும், இரண்டாவது பதிப்பில் 15,337 குழுக்களும் பங்கேற்றன.

கடந்த 3 ஆண்டுகளில் வேலைவாய்ப்பு பெறுவதற்கு விருப்பம் தெரிவித்த 3,60,389 இறுதி ஆண்டு கல்லூரி மாணவர்கள் கல்லூரி வளாக வேலைவாய்ப்பு முகாம்கள் மற்றும் நான் முதல்வன் மாவட்ட வேலைவாய்ப்பு முகாம்கள் மூலம் பணி நியமனம் பெற்றுள்ளனர்.

### கட்டணமில்லா குறுகிய கால பயிற்சி!

முதலமைச்சர் அவர்களால் 1.7.2025 அன்று தொடங்கப்பட்ட "வெற்றி நிச்சயம் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு முழுவதும் 18 வயது முதல் 35 வயது வரை உள்ள படித்து வேலைத் தேடும் இளைஞர்களுக்கு மொத்தம் 38 தொழிற்பிரிவுகளில் 165 விதமான திறன் பயிற்சிகள், ZF Rane, TVS Supply Chain, MRF, Saint Gobain, TI Murugappa Group, Brakes India, Tata Electronics, LG, Ashok Leyland, Apollo, Tally உள்ளிட்ட 500க்கும் மேற்பட்ட முன்னணி பயிற்சி நிறுவனங் களின் மூலம் கட்டணமில்லா குறுகிய கால பயிற்சி அளிக்கப்படுகின்றது.

மேலும், மாற்றுத்திறனாளிகள், பழங்குடியினர், இலங்கைத் தமிழர்கள், மீனவ இளைஞர்கள், சிறுபான்மையினர், நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டுப் பகுதியில் வாழும் இளைஞர்கள், தூய்மைப் பணியாளர்களின் குடும்ப உறுப்பினர்கள், திருநங்கைகள், ஆதரவற்ற விதவைகள் போன்ற சமூக மற்றும் பொருளாதார ரீதியாக பின்தங்கிய பிரிவினருக்கு திறன் பயிற்சியில் முன்னுரிமை அளிக்கப்பட்டு, ரூ.12,000 வரை திறன் ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது.

இதன் மூலம், பயிற்சி பெற்றவர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பு உறுதி செய்யப்படுகிறது. பயிற்சியில் ஜெர்மன் உள்ளிட்ட அயல்மொழிப் பயிற்சிகளும் இடம்பெறுகின்றன, இதனால் தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு அயல்நாட்டு வேலைவாய்ப்புக்கான பாதைகள் உருவாக்கப்படுகின்றன. இத்திட்டத்தின் மூலம் தற்போது 29,855 நபர்கள் திறன் பயிற்சி பெற்று வருகின்றனர்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் துணை முதலமைச்சர் அவர்கள் நான் முதல்வன் திட்டத்தின் கீழ் சிறப்பாக செயல்படும் கல்லூரிகளை தேர்ந்தெடுத்து ஊக்குவிக்க வேண்டும். 2026 இல் சீனாவின் ஷாங்காய் நகரில் நடைபெற உள்ள சர்வதேச திறன் போட்டிகளில் பங்கு பெறுவதற்கான தமிழ்நாட்டு மாணவர்களின் எண்ணிக்கையினை உயர்த்த தேவையான உயர்தர தொழில்நுட்ப பயிற்சியினை வழங்க வேண்டும்.

நிரல் திருவிழா 2.0 மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களை தொழில் முனை வோர்களாக உருவாக்க வேண்டும். நான் முதல்வன் திட்டத்தின் மூலம் நடை பெறும் வேலைவாய்ப்பு முகாம்களை அதிகப்படுத்தி அதிக எண்ணிக்கையிலான மாணவர்கள் வேலைவாய்ப்பைப் பெற தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

நான் முதல்வன் திட்டத்தின் போட்டித் தேர்வுகள் பிரிவின் கீழ் அரசு பணிகளில் பணிவாய்ப்பு பெறுபவர்களின் தேர்ச்சி எண்ணிக்கையை அதிகப்படுத்த இலக்கு நிர்ணயித்து செயல்பட வேண்டும். விளையாட்டுத் துறையில் சிறந்து விளங்கியவர்கள் அவர்கள் விரும்பும் வேலைவாய்ப்பினை பெறும் வகையில் திறன் பயிற்சிகளை வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழக அலுவலர்களுக்கு துணை முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் சிறப்புத் திட்ட செயலாக்கத்துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் மேலாண்மை இயக்குனர் கிராந்தி குமார் பாடி, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



கடலூர் கிழக்கு மாவட்டம்,குறிஞ்சிப்பாடி சட்டமன்றத் தொகுதி, குறிஞ்சிப்பாடி பேரூராட்சி, எஸ்.பி. மஹாலில் உங்களுடன் ஸ்டாலின் நிகழ்ச்சி, செயல் அலுவலர் ஜி.பாலமுருகன் தலைமையில் நடை பெற்றது. வட்டாட்சியர் விஜய் ஆனந்த் முன்னிலை வகித்தார். மாவட்டக் கல்விக்குழுத் தலைவர் வி.சிவக்குமார் துவக்கி வைத்து, கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகத்தினை வழங்கினார். இந்நிகழ்வில் வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் ஆர்.நாராயணசாமி, பேரூராட்சி தலைவர் கோகிலா குமார், துணைத் தலைவர் ஆர்.ராமர், பேரூர் செயலாளர் கே.வி.பி.சங்கர், துணைச் செயலாளர் விடுதலை சேகர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## இரா.சடகோபன்

### செப்டம்பர் 3 (1979)



சென்னையில் கழகத்தின் ஆரம்பகால வளர்ச்சிக்கு பாடுபட்டவர்களில் ஒருவர்.

1961ஆம் ஆண்டு சென்னை நகரக் குடிசை வாழ்வோர் மாநாடு நடத்தி அந்த சங்கத்தின் பொதுச் செயலாளராக இருந்தவர்.

கழகத்தின் பொதுக்குழு உறுப்பினராகவும், 1959 முதல் 1968 வரை சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராகவும், 1965–66இல் துணை மேயராகவும், 1967இல் மாநகராட்சி மத்திய குழு தலைவர் போன்ற பொறுப்புகளை வகித்தவர்.

விலைவாசி உயர்வு எதிர்ப்பு – இந்தி எதிர்ப்பு ஆகிய போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

பேரறிஞர் அண்ணாவால் பாராட்டப்பட்டவர்.

தலைவர் கலைஞரின் அன்புக்கு பாத்திரமானவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.